கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா.1 நாள்: 21.09.2022

அமர்வு வழக்கு எண். 75/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் பேரளம் காவல் நிலையத்தில் SSI ஆக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 11.11.2013 அன்று பொறையார் காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது மேற்படி தேதியன்று நண்டலால் செக் போஸ்டில் டூட்டிப்பார்த்தேன். அப்போது அன்று காலை 6 மணியளவில் முநிகா சரவணனும் பணியிலிருந்து வாகனங்களை தனிக்கை செய்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக செக்போஸ்ட்டில் வைக்கப்பட்டிருந்த தடுப்பை இடித்துத் தள்ளிவிட்டு ஒரு டிப்பர் லாரி நிற்காமல் சென்றது அந்த டிப்பர் லாரியின் பதிவு எண் TN 57 M1902 ஆகும். அந்த லாரியை இருசக்கர வாகனத்தில் துரத்திப்போய் பிடித்து காவல்நிலையம் கொண்டுவந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் மேலே கூறியவாறு கொடுக்கப்பட்டதாகும். அது அ.சா.ஆ.1 ஆகும். ஆய்வாளர் விசாரித்தார். மேற்கூறிய சேதடைந்த இரும்பு பைப் மதிப்பு ரூ.12,000/- ஆகும்.

எதிரி தரப்பிலான குறுக்குவிசாரணை

முதல் நாள் காலை 8 மணியிலிருந்து மறு நாள் காலை 8 மணிவரை செக்போஸ்ட் டூட்டி. செக்போஸட் டூட்டி சப்டிவிசனில் இருக்கும் வேறு காவல் நிலையத்திலிருந்தும்போடுவார்கள். சம்பவ தேதியில் மேற்கூறிய நாங்கள் இருவரும் மட்டுமே பணியிலிருந்தோம். சம்பவம் நடந்த பின்னர் ஆய்வாளர் அங்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் அவர் வரவில்லை நாங்கள் தான் காவல் நிலையம் போனோம். மேற்படி செக் போஸ்ட் வழியாக நிறைய வாகனங்க தினசரி போய் வரும் என்பது சரிதான். வழக்கமாக செக் போஸ்ட்டில் இருக்கும் நின்ட தடுப்புக் கம்பியை

இறக்கிதான் வைத்திருப்போம் வண்டிகள் வந்தால் தூக்கிவிடுவோம். எந்த வாகனமாக இருந்தாலும் நிறுத்தியபின்னர்தான் செல்லவேண்டும். மேற்கூறிய தடுப்பு கம்பி இல்லாமல் பேரிக்காடு போட் டு இருப்பீர்களா என்றல் அந்த இடத்தில் இல்லை. புகார் கொடுக்கும்போது நேரம் என்ன என்றால் சம்பவத்திற்கு பின்னர் அறைமணி நேரத்தில் கொடுத்துவிட்டேன். புகாரை நான்தான் எழுதினேன். எனது புகாரில் வாகனத்தை விரட்டி சென்று பிடித்ததாக குறிப்பிட்டு இருக்கிறீர்களா என்றால் ஆமாம். சம்பவத்தின் போது எதிரியைப் பார்த்தேன் பெயர் முகவரி தெரியாது. எனது புகாருக்கு பின்னர் ஆய்வாளரிடம் நடந்ததைச் சொன்னேன். பின்னர் பணி மாறுதலில் சென்றுவிட்டேன். எனது தனி அறிக்கையில் எதிரியின் பெயரை விசாரித்து தெரிந்துக்கொண்ட வகையில் தெரிந்து கொண்டேன். எதிரியின் பெயரை ஜீவா என்பவரை விசாரித்து தெரிந்துக்கொண்டேன். சம்பவத்திற்கு பின்னர் எவ்வளவு நேரம் கழித்து எதிரியின் பெயரை தெரிந்துக்கொண்டேன் என்றால் இரண்டு நாட்கள் கழித்து தெரிந்துக்கொண்டேன். பொதுவாக பேரிகேடு பள்ளிகள் அல்லது வனிக நிறுவனங்கள் ஸ்பான்சர் செய்வார்கள் என்பது சரிதான். எனது தனிப்புகாரிலும் ஆய்வாளர் விசாரணையிலும் லாரியை எங்கு போய்பிடித்துவந்தோம் என்பதை குறிப்பிடடு சொல்லியிருக்கிறேன். சேதமான பொருட்களை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் நான்தான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். நான் அவ்வாறு ஒப்படைத்த விபரத்தை தனிஅறிக்கையில் சொல்லியிருக்கிறேன். என்னால் சொல்லப்படுவதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும் சொல்வது சரியல்ல. என்னால் சொல்லப்படும் சமயத்தில் எதிரி எந்த ஒரு வாகனமும் ஓட்டாமல் ஊரில்தான் இருந்ததாக சொல்வது சரியல்ல. எதிரி மீது ஆய்வாளர் கேட்டுக்கொண்டபடி புள்ளவிபர நோக்கத்திற்காக பொய் புகார் கொடுத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 2 நாள்: 21.09.2022

அமர்வு வழக்கு எண். 75/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் HC யாக பணிபுரிந்துவருகிறேன். சம்பவ காலத்தில் பொறையார் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தேன். அ.சா.1 அந்த சமயத்தில் என்னுடன் அதே காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்தார் எதிரியைத் தெரியும் 11.11.2013 அன்று காலை 6 மணியளவில் நானும் அ.சா.1 உம் நந்தலால் சோதனைச் சாவடியில் வாகனத்தனிக்கையில் இருந்தபோது தரங்கம்பாடி ரோட்டிலிருந்து நந்தலால் நோக்கி அதிவேகமாக ஒரு டிப்பர் லாரி வந்தது அந்த டிப்பர் லாரியின் பதிவு எண். TN 57M1902 ஆகும். வண்டியை நிறுத்த சைகை செய்தும் வண்டியை நிறுத்தாமல் தடுக்கும் பாரை இடித்து சேதப்படுத்திவிட்டு சென்றுவிட்டது பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். மேற்படி லாரியை நாங்கள் போய் நிறுத்தவில்லை. அ.சா.1 ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். சேதமான பார் மதிப்பு ரூ.12,000/- ஆகும். ஆய்வாளர் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை

வழக்கமாக செக்போஸ்ட் டூட்டி என்பது காலை 8 மணிமுதல் மறுநாள் காலை 8 மணிவரையாகும். காவல்நிலையத்திலிருந்து மேற்படி செக்போஸ்ட் 3 கிலோ மீட்டர் தூரம் சம்பவ ரோட்டில் வழக்கமாக நிறைய வாகனம் போய் வரும் என்பது சரிதான். சம்பவத்திற்கு பின்னர் ஆய்வாளர் செக்போஸ்ட்டுக்கு வந்து பார்த்தார் சம்பவத்திற்கு பின்னர் அதே தினம் காலை 10 மணியளவில் சம்பவ இடம் வந்து பார்த்தார். அந்த செக்போஸ்டில் CCTV கேமரா இல்லை. அந்த சமயத்தில் மேற்படி நாங்கள் இருவர் மட்டும் தான் செக்போஸ்ட் டூட்டி

பார்த்தோம். சேதமான பாரை காவல் நிலையத்தில் நான்தான் ஒப்படைத்தேன். ஆய்வாளர் விசாரணையில் பொருட்களை ஒப்படைத்த விபரத்தை சொல்லியிருக்கிறேன். சம்பவ சமயத்தில் எதிரியை நான் பார்க்கவில்லை என்பது சரியல்ல. எதிரியை பார்த்ததாக ஆய்வாளரிடம் சொல்லவில்லை. எதிரியின் பெயரை அ.சா.1னுதான் கேட்டு சொன்னார் . என்னால் சொல்லப்படும் தேதியிலும் நேரத்திலும் நான் செக்போஸட் டூட்டியில் இல்லை என்றும் எதிரியும் அந்த நேரத்தில் அந்த நேரத்தில் எந்த வண்டியும் ஓட்டாமல் வீட்டில்தான் இருந்தார் என்பது சரியல்ல. புள்ளிவிபர நோக்கத்திற்காக ஆய்வாளர் கேட்டக்கொண்டபடி போட்ட பொய் வழக்கிற்று ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.